IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.317/2008
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி சக்கையா த.பெ.சங்கிலி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 21.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதி பழனியாண்டியின் தந்தை பெயர் பொன்னுச்சாமி என்றால் சரிதான். பொன்னுச்சாமியின் தந்தை பெயர் கருப்பையா என்றால் சரிதான். கருப்பையாவிற்கு 2 மக்கள் முத்தையா, பொன்னுச்சாமி ஆகியோர்கள் என்றால் சரிதான். முத்தையாவிற்கு 2 மகன்கள் என்றால் தெரியாது. தாவா சொத்து முதல் இலக்கத்திற்கு எத்தனை செண்டு என்றால் 14 ஏர்ஸ் ஆகும். இந்த சொத்துக்களை எனது வழக்கின் படி இருளப்பர்தேவர் சொத்து என்றால் சரிதான். மேற்படி இருளப்பதேவர் பெயரில் வழக்கு சொத்து பொறுத்து பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2. மேற்படி இருளப்பதேவர் தாவா சொத்தை பொறுத்து ஆத்தாங்ரை தேவருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி இருளப்பதேவர் பெயரிலும், ஆத்தாங்கரை பெயரிலும் பட்டா இல்லை என்றால் சரிதான். நான் ஆத்தாங்கரை தேவரை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. ஆத்தாங்கரை தேவருக்கு எத்தனை குழந்தைகள் என்பது எல்லாம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆத்தாங்கரை தேவர் என்பவருக்கு உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் முத்துமுருகன் என்ற ஒருவர் உடன் பிறந்ததாக கேள்விபட்டிருக்கிறேன். ஆனால்,

முத்துமுருகனை நான் பார்த்ததில்லை. முத்துமுருகனுக்கு எத்தனை மக்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு முத்துமுருகன் பெயரிலும் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். முத்துமுருகனும், ஆத்தாங்கரை தேவரும் தாவா சொத்தை யாருக்காவது கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்களா என்றால் கொடுக்கவில்லை. மேற்படி இரண்டு பேரும் பாகம் செய்துகொண்டார்களா என்றால் தெரியாது. எனது வழக்கு படி தாவா சொத்து வெள்ளைச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் என்றால் சரிதான். ஆனால் அவர் பெயரில் எந்தவிதமான பட்டாவும் இல்லை என்றால் சரிதான்.

3. வெள்ளைச்சாமி பெயரில் தாவா சொத்திற்கு எந்த பத்திரமும் இல்லை என்றால் சரிதான். நான் வெள்ளைச்சாமியின் மனைவி கோணம்மாள் பெயரிலும் தாவா சொத்திற்கு எவ்விதமான பட்டாவும் இல்லை என்றால் சரிதான். வெள்ளைச்சாமி, கோணம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 6 பிள்ளைகள். 6 பிள்ளைகளும் தாவா சொத்தை பாகம் செய்துக்கொண்டார்களா என்றால் பாகம் செய்யவில்லை. தாவா சொத்து சந்திராவுக்கும், அழகம்மாளுக்கும் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பத்திரம் எதுவும் கிடையாது, அனுபவப்படிதான் பாத்தியம்.

4. பி.வா.சா.ஆ3 ஆவணமானது கருப்பையா மகன் சன்னாசி பெயரில் உள்ளது, அது தவறான பட்டா என்றால் சரிதான். சந்திரா மற்றும் அழகம்மாள் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பெயர் சந்திரா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ4 ஆவணமானது யாருடைய இறப்பு சான்றிதழ் என்றால் மூக்கத்தேவரின் இறப்பு சான்றிதழ் ஆகும். பி.வா.சா.ஆ4 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் கருப்பையாவின் தகப்பனார் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

பி.வா.சா.ஆ3, 4 ஆவணங்களை பற்றி எனது எதிர்வழக்குரையில் எந்தவிதமான விபரங்களும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ 2, 3 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் வழக்கிற்கு உதவாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 4 ஆவணம் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அசல் எனது கைவசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ற்கும் உங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. வழக்கிற்காக பி.வா.சா.ஆ1 ஆவணம் சம்பந்தமில்லாமல் நீங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. கருப்பையா என்பவருக்கு சன்னாசி என்ற மகன் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து ஆதியில் கருப்பையாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கருப்பையாவிற்கு பாத்தியப்பட்டு பின்னிட்டு அவரது மகனுக்கு பாத்தியப்பட்டு தற்போது பழனியாண்டிக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்குள்ளான பாத்தியத்தையும், அனுபவத்தையும் இடைஞ்சல் செய்ததால் வாதி இந்த வழக்கை உங்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ராசுதேவர் என்பவர் என்னுடன் பிறந்தவர் என்றால் சரிதான்.

7. 1ம் பிரதிவாதி ராசுதேவரின் மனைவி அழகம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி மற்றும் அழகம்மாள் அவர்களின் வாரிசுகள் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி

சந்திரா எனது மனைவி என்றால் சரிதான். தாவா சொத்தில் 7 பேருக்கும் பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பாரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.21 09:57:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.